

பெரம்பலூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர்– முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் – வேப்பூர் ஒன்றிய கழகச் செயலாளர் – வேப்பூர் ஒன்றிய குழுத் துணைத் தலைவர்– தற்போதைய மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர், குன்னம் சி.இராஜேந்திரன் (72) உடல் நலக்குறைவு காரணமாக மறைந்ததையடுத்து, பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு,கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி உள்ளிட்டோர் உள்ளனர்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மருத்துவ அணி துணை அமைப்பாளர் கே.ஜியாவுதீன் குத்தூஸ் ஜெ.சையது ராபியா ஆகியோர் மகள் டாக்டர் நூருல் மர்லியா, ஏ.அபுபக்கர் ஏ.நர்கிஸ்பானு ஆகியோர் மகன் ஏ.அப்துல் ரியாஸ் பி. இ., ஆகியோரின் திருமணம் மற்றும் வரவேற்பு விழா 6.9.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருமண விழாவில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான சு.முத்துசாமி, மாவட்ட கழக நிர்வாகிகள் குமார் கே.முருகேஸ், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, பகுதி கழக செயலாளர்கள் அக்னி சந்துரு, பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், ஆன்றோர், சான்றோர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை ஏ.எஸ்.ஏ.சமது, கே.ஜியாபுதீன் குத்தூஸ், சிராஜ்தீன், சையதுமுஸ்தபா, அப்துல்ரஹ்மான், குத்தூஸ்பாபு, இம்ரான், சாகுல்அமீது, சதாம்உசேன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

### பெரம்பலூர் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகத்தின்

# வளர்ச்சிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் குன்னம் சி.இராஜேந்திரன்!

## மறைவுச் செய்தியறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

பெரம்பலூர், செப், 9 -

பெரம்பலூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர் முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் வேப்பூர் ஒன்றியக் கழகச் செயலாளர் - வேப்பூர் ஒன்றிய குழுத் துணைத் தலைவர் தற்போதைய மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர், குன்னம் சி. இராஜேந்திரன்(72),உடல் நலக்குறைவு காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு,கழக துணைப் பொதுச் செயலாளர்

ஆ. இராசா.எம்.பி., கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்

பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்

இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க. வரதராஜன், ஜான் அசோக், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ். டி. ஜெயலெட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ராஜ்குமார், செ. நல்லதம்பி, தி. மதியழகன்,

சி.ராஜேந்திரன், டாக்டர் செ. வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு. தங்கராசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், வேப்பூர் ஒன்றியக்கழு முன்னாள் தலைவர் பிரபா செல்லப் பிள்ளை, மாவட்ட விவசாய கூலித் தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ. எம். கே. கரிகாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மா. பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் மற்றும் அணி அமைப்பாளர் எம். மணி வாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

### பேரா.சபாபதி மோகன் – உடுமலை ஜெயக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, செப். 9 -

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தளபதி அவர்களின் உத்தரவின் படி, கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை ( 10.09.2026- வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், தளபதி



மன்றத்தில் மாவட்ட அவைத்தலைவர் கே.குமார் முருகேஷ் தலையில் தலைமைக்கழக பிரதிநிதிகள் சபாபதி மோகன், உடுமலை ஜெயக்குமார் எம். எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெற வுள்ளது.

அதுசமயம் இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்டம் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்கள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் காலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:

1. 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, பகுதி, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை விடுத்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்

# சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கோரி தனி நபர் தீர்மானம்!

## பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தார்!

**சென்னை, செப்.9-**

**குளறுபடிகளற்ற சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வலியுறுத்தி தனி நபர் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து சட்டப்பேரவைத் தலைவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடிதம் அளித்துள்ளார்.**

குளறுபடிகளுக்கு இடம் தராமல் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும், இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையைக் காப்பாற்றச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்ற வேண்டும் என்றும் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்து தனி நபர் தீர்மானம் ஒன்றை முன் மொழிந்து சட்டப்பேரவைத் தலைவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடிதம் அளித்துள்ளார்.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் நோக்கமே பட்டியலினச் சமூக மக்களின் எண்ணிக்கையைப் போல, OBC மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் அவர்களது கல்வி, சமுதாய, பொருளாதார நிலைமையையும் அறிந்துகொள்வது தான் என்பதால் ஒன்றிய, மாநில அரசுகளின் OBC சாதிகளின் பட்டியலை வைத்து,

அதிலிருந்து மக்கள் சாதிப்பெயரைத் தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றி னால்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம் நிறைவேறும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர், செப். 9 -

பெரம்பலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று 09.09.2026 புதன் கிழமை) நடைபெறுவதாக இருந்தது.

பெரம்பலூர் முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் மறைவையொட்டி செயற்குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது எனவும் பின்னர் தேதி அறிவிக்கப்படும் என்றும் பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெக தீசன் தெரிவித்துள்ளார்.

# மாதவரத்தில் பூப்பந்து கிரிக்கெட் போட்டி!

சென்னை, செப். 9 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம்சட்டமன்றதொகுதிக்குஉட்பட்ட செங்குன்றம்பேரூர்கழகத்தின் GENZ DMKசார்பில்இருநாள்மாபெரும்பகல் நேரபூப்பந்துகிரிக்கெட்போட்டிஎல்.ஆர். மணிகண்டன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். டி.மதன்குமார் மற்றும்செங்குன்றம்பேரூர்கழகத்தின் பொறுப்பாளர் ஆர்.டி.சுதாகர் ஆகியோர் இணைந்து போட்டியில் பங்கேற்றுவெற்றிபெற்றவிளையாட்டு வீரர்களுக்கு கோப்பை மற்றும் பரிசுத் தொகையை வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் பேரூர் கழக துணை செயலாளர் கே.கபிலன், அன்பு, மதிவாணன், அறிவுநிதி, அப்துல் சமத், இளைஞர் அணி அமைப்பாளர்கள் கே.எல்.என்.லெனின்குமார், புழல் செ.யுவராஜ், மணலி எஸ். ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் சாம்கார்த்தி, கருப்பு (எ) ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, ரவிந்திரன், ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன், காவை சாந்தகுமார், ம.குறளரசன், ஆர்.ரூபேஷ்,வார்டுஅமைப்பாளர்கள் நந்தகுமார், பிரபாகரன், வருண், புழல் சித்தர், அரிஷ், நித்தீஷ், வினோத், ஜசக்,மேலும்இந்நிகழ்வில்இளைஞர் அணி தோழர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

### பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# குன்னம் சி.ராஜேந்திரன் மறைவு!


## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. நேரில் அஞ்சலி!

பெரம்பலூர், செப். 9 –

பெரம்பலூர் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர், பெரம்பலூர் மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு தலைவர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர், தற்போதைய மாநில வர்த்தக அணித் துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன் (72) உடல் நலம் பாதிக்கப்பட்டு திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (7.9.2026) மதியம் 12.50 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது உடல் சொந்த ஊரான குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்று (08.09.2026 – செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணி



யளவில் குன்னத்தில் நல்அடக்கம் செய்யப்பட்டது.

மறைவு தகவல் அறிந்ததும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. நேரில் சென்று மறைந்த குன்னம் சி.ராஜேந்திரன் உடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க. வரதராஜன், ஜான் அசோக்,

பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ். டி ஜெயலெட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்

ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ராஜ்குமார், செ. நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ. வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு. தங்கராசு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், வேப்பூர் ஒன்றியக்கழு முன்னாள் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மா. பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் மற்றும் அணி அமைப்பாளர் எம்.மணி வசகம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னர்.

மறைந்த குன்னம் சி. ராஜேந்திரனுக்கு ராம திலகம் என்கிற மனைவியும், செந்தில்நாதன், வெற்றிவேல், ரமேஷ் ராஜேந்திரன் ஆகிய மூன்று மகன்களும் உள்ளனர்.

ரமேஷ் ராஜேந்திரன் என்பவர் தி. மு. க. தகவல் தொழி ல்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளராக உள்ளார்.

### இரா.கிரிராஜன் எம்.பி. – அழகிரி சதாசிவம் முன்னிலை!

# சேலம் கிழக்கில் முப்பெரும் விழா - விருது பெறுபவர்களுக்கு வாழ்த்து!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சேலம், செப். 9 –

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழகப் பிரதிநிதி களான, கழக சட்டத்திட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி, மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம். பி., கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட் டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:



### தி.மு.க முப்பெரும் விழா

செப்டம்பர் மாதம் 15ம் நாள் நம் மையெல்லாம் ஆளாக்கிய அறிவுலகமேதை தமிழ் இனத்தின் காவலராக தமிழ்மொழி காத்த பேரறிஞராக, தமிழ் பண்பாட்டின் சின்னமாக, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய தமிழ் இனபோராளியாக, திராவிட இனத்தின் உரிமைக் குரலாக, அன்றைய இந்திய பிரதமராக இருந்த நேரு அவர்களே வியக்கத்தக்க வகையில் இந்திய பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் ஒலித்த அந்த குரல் ஒட்டு மொத்த இந்தியாவே திரும்பி பார்க்க வைத்த பேரறிஞர் அண்ணாவின் எழுச்சி உரை நம் இனத்திற்கு பெருமை சேர்த்தது என்பது வரலாற்றில் வரையப்பட்ட ஒன்று.

தந்தை பெரியாரின் எண்ணங்களை லட்சியங்களை பட்டிதொட்டியெங்கும் பறைசாற்றி பகுத்தறிவு கொள்கைகளை பாமர மக்கள் மனதில் வேர் ஊன்ற செய்த மகத்தான மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள்.

ஏழை, எளிய மக்களின் நலனுக்காக உரிமைக்காக தமிழ் இனத்திற்கு, தமிழ் மொழிக்கு பாதுகாப்பு கேடயமாக திராவிட முன்னேற்ற கழகம் என்ற பேரியக்கத்தை தொடங்கி வைத்தவர். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணமுடியும் என்ற நம்பிக்கை ஊட்டிய பெருந்தகை நம் அண்ணா! அவர் தொடங்கிய இந்த இயக்கம் 75 ஆண்டுகளை கடந்து, அவர் விதைத்த விதை இன்று கற்பக விருட்சகமாக, ஆலமரமாக, கம்பீரமாக காட்சியளிக்கிறது.

நம் வாழ்விற்கு வழிகாட்டியாக நம் இனம், மொழிக்கு உலக அளவில் பெருமை சேர்த்த பேரறிஞர் பெருந்தகை அறிவுலக ஆசான், காஞ்சி தந்த கரிபால்டி, தத்துவ மேதை பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர் 15.

தமிழர்களுக்கு முகவரி தந்த பகுத்தறிவு பகலவன், ஆண்டான் அடிமை, பிறப்பால் தாழ்ந்தவன் உயர்ந்தவன், தொட்டால் தீட்டு, நிழல் பட்டால் குற்றம்

என்று தமிழர்களை இழிவுபடுத்தி வந்த வர்ணாசிரம வாதிகளை வரட்டு சித்தாந்தம் பேசிய ஆதிக்க சக்திகளின் ஆணிவேரையே அகற்றிய பகுத்தறிவு சிங்கம் நம் தந்தை பெரியார்.

மூட நம்பிக்கை என்ற முட நாற்றத்தையே முலையிலே தூக்கி வீசியவர். ஏன் எதற்காக என்ற கேள்வியை தமிழனை கேட்க வைத்து தன்மான உணர்வை உணரவைத்தவர் வைக்கம் வீரர் தந்தை பெரியார் 95 வயது வரை தன் இறுதி மூச்சு அடங்கும் வரை ஓய்வின்றி தன் லட்சியங்களை தமிழினம் காக்க முழங்கிய திராவிட இனத்தின் சுடரொளி தந்தை பெரியார் பிறந்த தினம் செப்டம்பர் 17.

நம் இரத்த நாளங்களில் உயிர் மூச்சில் ஒன்றென கலந்து நம் இனத்திற்காக மொழிக்காக தமிழர்களின் உரிமைக்காக தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழகம் என்ற பேரியக்கம் தோன்றிய நாள் செப்டம்பர் 17.

பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தந்தை பெரியார் பிறந்தநாள், கழகம் தொடங்கிய நாள் ஆகிய மூன்றும் இணைந்து திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது. இயக்கத்திற்காக உழைத்த சான்றோர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கும் விழாவாக வருகின்ற செப்டம்பர் 15ம் நாள் சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் சிறப்பாக நடைபெற உள்ளது. அதுசமயம் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழகங்கள் சார்பாக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, நலதிட்ட உதவிகள் வழங்குவது எனவும், அதனை தொடர்ந்து சென்னை அண்ணா அறிவாலயம் ”கலைஞர் அரங்கில் நடைபெறும் முப்பெரும் விழாவில் சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பது எனவும் இம்மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

பெரியார் காட்டிய பகுத்தறிவுப் பாதை! அண்ணா காட்டிய ஜனநாயகப் பாதை! கலைஞர் காட்டிய சமூகநீதிப் பாதை!

இந்த கொள்கைகளை நெஞ்சில் ஏந்தி, தமிழ்நாட்டின் உரிமைகளையும், மக்களின் நலனையும், சமூகநீதியையும் பாதுகாத்து வரும் வணக்கத்திற்கும், போற்றுதலுக்கும் உரிய பேரியக்கத்தின் ஒப்பற்ற கழகத் தலைவர் தளபதி.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சிறப்பாக மக்கள் பணியாற்றுவோம்.

**பெரியார் புகழ் ஓங்குக!**

**அண்ணா புகழ் ஓங்குக!**

**கலைஞர் புகழ் ஓங்குக! திராவிட இயக்கக் கொள்கைகள் வெல்க!**

**தமிழ்நாடு வாழ்க! தமிழ் வெல்க!**

செப்டம்பர் மாதம் 15ம் நாள் சென்னை அண்ணா அறிவாலயம் ”கலைஞர் அரங்கில் நடைபெற உள்ள நிலையில் ஆண்டுதோறும் வழங்கப்படும் தி.மு.க. முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்

### பெரியார் விருது

கழக விவசாய அணி துணைச் செயலாளர் கு.செல்லப்பா அவர்களுக்கும்

### அண்ணா விருது

சேலம் மாவட்ட கழக மூத்த முன்னோடி, நகர செயலாளராக, மாவட்ட கழக அவைத்தலைவராக, நகரமன்ற உறுப்பினராக, கூட்டுறவுதுறை என பல்வேறு பொருப்புகள் வகித்து தலைமை கழகமும், மாவட்ட கழகமும் இடுகின்ற பணிகளை சிறப்பாக செய்து வருகின்ற சேலம் ஜி.கே. சுபாஷ் அவர்களுக்கும்

### கலைஞர் விருது

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை மாறாத் தன்மையோடு, தமிழ்நாட்டின் உரிமைக் குரலாய், வரலாற்றையும், தரவுகளையும் துல்லியமாக எடுத்துரைத்து, மேடைப் பேச்சுகள் கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும் ஆற்றல் கொண்ட கழக துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவா. ,M.A.B.L அவர்களுக்கும்,

### பாவேந்தர் விருது

கழக மருத்துவர் அணித் தலைவரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான அவர்களுக்கும் டாக்டர்.திருமதி.கனிமொழி என்.வி. என்.சோமு அவர்களுக்கும்

### பேராசிரியர் விருது

கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா எஸ்.அகமது தம்பி அவர்களுக்கும்

### மு.க.ஸ்டாலின் விருது

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா அவர்களுக்கும்.

### முரசொலி செல்வம் விருது

முரசொலி அறக்கட்டளை சார்பில் ஊடகவியலாளரும், எழுத்தாளருமான ப.திருமாவேலன் அவர்களுக்கும்

15.09.2026ல் விருது பெரும் அனைத்து சான்றோர்களுக்கும் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்வதோடு, இத்தைய சிறப்புமிக்க விருது அறிவித்த ஒப்பற்ற கழகத் தலைவர், திராவிட நாயகர், தளபதியார் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறோம்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்கு மார், சின்னதுரை, டாக்டர் தருண், மலர்விழி ராஜா, தே. மலையரசன் எம். பி., ஏ.ஏ. ஆறுமுகம், தமிழ்செல்வன், சந்திரமோகன், முனைவர் சீனிவாசன், சங்கர், கோபால், வழக்கறிஞர் கணேசன், மாதேஸ்வரன், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம், வெண்ணிலா சேகர், சதீஷ்குமார், உமாசங்கர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், அழகுவேல், மணி, பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், ராமச்சந்திரன், பேரூர் செயலாளர்கள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், என திரளாக கலந்து கொண்டனர்.

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமைக் கழகப் பிரதிநிதி களான, கழக சட்டத் திட்டத் திருத்த க்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி, கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம். பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார். இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.